**தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டத்திம் - 2021**

-----------------------------------------------------------------------

தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3027-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தென்பகுதி நெடுஞ்சாலைகள் இணைப்பு வீதிகளின் 33 கிலோமீற்றர்களை தரப்படுத்தி புனரமைத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,248 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 3,223 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 25 மில்லியன் ஜிஓஎஸ்எல் இனால் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 27 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி உரிமையாளர்களின் ரூபா 205 மில்லியன் சட்டரீதியான இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் மீதான செலுத்த வேண்டிய வட்டி அண்ணளவாக ரூபா 68 மில்லியன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 68 | நிதிக்கூற்றின் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலுத்தவேண்டிய இழப்பீடு ரூபா 205 மில்லியனுடன் தொடர்புபட்ட ரூபா 68 மில்லியன் வட்டி அடயாளப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டி 2006 இன் பிரிவு 8.13.4. | ஒப்பந்தபொதி - 02 இன் மொத்த கிரயம் ரூபா 3,064 மில்லியனாகவிருந்ததுடன் ரூபா 510 மில்லியன் அல்லது மொத்த ஒப்பந்த தொகையில் 20 சதவீதம் நிகழத்தக்க ஒதுக்கத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டி 2006 இன் உப பிரிவின் பிரகாரம், ஒப்பந்த தொகையினை மிஞ்சுவதற்கு தேவையான அனுமதிபெறப்படல் வேண்டும்இருப்பினும், ரூபா 1,573 மில்லியன் அல்லது மொத்த ஒப்பந்த தொகையில் இருந்து 51 சதவீதம் இவ் அனுமதியின்றி ஏற்படுத்தப்பட்டிருந்தது. | டிஈசி (TEC), பிபிசீ (PPC) இன் அனுமதியின் உரிய கருத்துரை மற்றும் ஏடீபி (ADB) யின் ஒத்துழைப்பு என்பன பிஎம்யூவினால் பெறப்பட்டிருந்தது. | மாற்றம் செய்யப்பட்ட மொத்த மதிப்பீட்டு கிரயத்தின் பிரகாரம் அதற்கான டிஈசி(TEC)இனால் கண்கானிக்கப்பட்ட அதற்கான பீசி (PC) இனால் மாற்றங்கள் அனுமதிக்கப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| விடயங்கள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| ஒப்பந்தபொதி 05 | உண்மைத் திட்டம் - 100 | 59 | செயற்திட்ட நடவடிக்கைகளின் உண்மைசெயலாற்றல் இலக்கிடப்பட்ட செயலாற்றலிற்கு பின்னாக காணப்பட்டது. | கோவிட் 19 பரவல் நிலைமை. |
| | மாற்றியமைக்கப்பட்ட திட்டம் - 84 | 78 | | |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

சீபி - 05 ஒப்பந்த பொதியின் பௌதீக செயலாற்றலின் தாமதம் காணி கொள்வனவில் தாமதம், பொதுப்பயன்பாட்டின் இடமாற்றலில் தாமதம் மற்றும் வேலைப்பரப்பு மாற்றம் போன்ற காரணங்களிற்கு மேலாக பிரதானமாக கோவிட் 19 பரவல் காரணத்தாலாகும்.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்**

தாமதங்கள் காரணமாக மேலதிக கிரயங்களை தவிர்கவும் பொதுமக்களின் அசௌகரியங்களை தவிர்கவும் இலக்கிடப்பட்ட தினங்களில் வீதி புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்களை விரைவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள தேசிய வீதிகளின் 40.2 கி.மீ இன் புனர்நிர்மானத்திற்கான 05 ஒப்பந்த பொதிகளின் பொதிகள் 1,2 மற்றும் 4 இன் நிர்மான வேலைகள் கருத்தில் கொள்ளத்தக்க ஓர் தாமதத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டது. அதன்படி, ரூபா 31.95 மில்லியன் தாமத கட்டணங்கள் 2017 ஜூன் 19 இல் ஒப்பந்த பொதி 1 இலிருந்து விதிக்கப்பட்டு 2019 ஒக்டோபர் 10 இல் ஒப்பந்ததாரரிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, பொதி 4 மீது விதிக்கப்பட்ட ரூபா 14.18 மில்லியன் தாமத கட்டணம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்காலத்தில் ஒப்பந்ததாரரிற்கு விடுவிக்க வேண்டிய ஓர் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். ஒப்பந்த பொதிகள் 01,02,04 மற்றும் 05 என்பன தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மேற்கூறிய ஒப்பந்த பொதிகளிற்கான பிரதான காரணங்கள் காணிசுவீகரிப்பில் தாமதம், பொதுப்பயன்பாடுகளை நகர்த்துவதில் தாமதம் மற்றும் வேலைப்பரப்பு மாற்றம் என்பனவாகும். ஒப்பந்ததாரர் இவ்வாறான நிலைமையினை கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் காணப்படாததுடன் அதனால் நியாயமான ஈஓடி அனுமதிக்க வேண்டியிருந்தது. ரூபா 14.08 மில்லியன் தொகையான தாமத கட்டணங்கள் பொதி 4 இன் ஒப்பந்ததாரரிடமிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் அதனை ஈஓடி அனுமதிக்கப்படும் வரை ஓர் பொறுப்பாக பதியப்பட்டது. | இலக்கிடப்பட்ட திகதிகளில் வீதி புனரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தகவலின் பிரகாரம், இடைக்கால கொடுப்பனவு பட்டியல் இல 29 இன் கீழ் 2019 ஜூன் 24 இல் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி கொடுப்பனவுடன் தொடர்புபட்ட கூட்டுமொத்தம் ரூபா 248.6 மில்லியனானது உண்மையான ஒப்பந்த பெறுமதியை விட மொத்த ஒப்பந்த கிரயம் மிஞ்சியதன் காரணமாக கடன் வழங்கும் முகவரினால் கொடுத்து தீர்க்கப்படாமல் காணப்பட்டது. எனவே, இப் பெறுமதி 2021 திசெம்பல் 31 இல் உள்ளவாறு கூட 2 1/2 வருடகாலமாக ஓர் செலுத்தவேண்டிய பொறுப்பாக காணப்பட்டிருந்தது. அதன் பெறுபெறாக, ஒப்பந்ததாரர் ரூபா 46.9 மில்லியன் தாமதத்திற்கான வட்டியாக மீளப் பெற்றிருந்ததுடன் அதன் விளைவாக மொத்த தீர்கப்படாத மீதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 310.6 மில்லியனிற்கு அதிகரித்திருந்தது. | உடன்பட்டனர். நிர்மானங்கள் செயன்முறையில் உள்ளபோது, சில நடைமுறை தேவைப்பாடுகள் வேலைப்பரப்பு மாற்றத்திற்கு உந்துகோலாக இருந்தது. எனவே, ஒப்பந்த பெறுமதி இதனால் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒப்பந்தாரருடனான ஓர் பரஸ்பர உடன்பாட்டுடன், மேற்கூறிய தேவைப்பாடுடன் ஒப்பந்த கூட்டு மொத்தத்தின் திருத்தத்துடன் தொடர்புபட்டு ஒப்பந்த காலம் காலாவதியாவதற்கு முன்னர் நிறைவேற்றப்படல் வேண்டும். | வட்டி கிரயங்களை நீக்க ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமின்றி ஒப்பந்ததாரர் பொறுப்பு தீர்க்கப்படல் வேண்டும். |

(இ) செயற்திட்டத்தின் மூலதனச்செலவு வாக்குப்பண இல.117-2-4-43-2506-17 இன் கீழான மொத்தத்தின் 95 சதவீதத்தினை பிறதிநிதித்துவப்படுத்தும் ரூபா 200.21 மில்லியன் ஜீஓஎஸ்எல் ஒதுக்கீடு மற்றும் வெளிநாட்டு கடனுடன் தொடர்புபட்ட மொத்தத்தில் 14 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்ததும் ரூபா 286 மில்லியன் ஒதுக்கீடு என்பன செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றல் வேலைகள் காரணமாக மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

உடன்பட்டனர். ரூபா 200 மில்லியன் பெறுமதியான மேலதிக ஒதுக்கீடு வாக்குப்பண இல.2-4-43-2056-17 இற்கான ஒப்பந்த பட்டியலினை செலுத்த அனுமதிக்கப்பட்டிருந்தது இருப்பினும், நேர வறையறைகள் காரணமான அது செயன்முறைப்படுத்தப்படவில்லை. வெளிநாட்டு வாக்குப்பண ஒதுக்கீட்டின்(14%) குறை பயன்படுத்தல் கோவிட் - 19 பரவல் பாதிப்புடனான செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக அறிக்கையிட்டிருந்தது.

செயற்திட்டத்தின் நிர்மான வேலைகள் கடன் வசதிகள் காலாவதியாவதற்கு முன்னர் மொத்த கடனையும் பயன்படுத்த முறையாக அமுல்படுத்தப்படல் வேண்டும்.

**3.3 காணி சவிகரிப்புடன் தொடர்புடய விடயங்கள்**

---

**கணக்காய்வு விடயம்**

கிடைத்திருக்கும் தகவலின் பிரகாரம், அரசாங்கத்திற்கு சொந்தமான 1,562 காணித்துன்டுகள் உள்ளடங்களாக 8,499 காணித்துன்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிட்டிருந்ததுடன் அதில் ரூபா 8,418 மில்லியன் தொகையான இழப்பீடு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 3,210 மில்லியன் தொகையான மேலதிக கொடுப்பனவுகள் காணி சுவிகரிப்பு மற்றும் மீள வழங்கள் சபையின் தீர்மானத்தின் கீழ் அதன் மீது செய்யப்பட்டிருந்தது. ஆதற்கு மேலதிகமான, கூட்டு மொத்தம் ரூபா 649 மில்லியன் 2021 திசெம்பர் 31 வரை இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் மீது வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், எவ்வித காணித்துண்டுகளும் 2021 திசெம்பர் 31 உள்ளவாறு காணி சுவிகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

உடன்பட்டனர். காணி இழப்பீட்டு செயன்முறைக்கான கொடுப்பனவு கிடைத்திருக்கும் நிதிகளின் அடிப்படையில் தீதமாகவுள்ள காணித்துண்டுகளிற்காக செயன்முறையிலுள்ளது. வட்டி கொடுப்பனவு 2021 இறுதியில் செய்து முடிக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளிற்கு வட்டி கொடுப்பனவுகள் காணி சுவிகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய முன்னர் முழுமையாக கொடுத்து தீர்க்க வேண்டும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**

இழப்பீட்டு கொடுப்பனவுகளை துரிதப்படுத்தவும் காணிகளின் உரிமையை ஆர்டிஎ விற்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.